முஸ்லிம் பெயர் அகராதி

தொகுத்து, தயாரித்து,
விளக்கம் எழுதியவர்:

முக்தார்

சிராஜ் பப்ளிகேஷன்ஸ்

5, வாலர்ஸ் ரோடு, சென்னை-2

முதல் பதிப்பு-நவம்பர் 1968

விலை ரூபாய் 7-25

இதிலுள்ள பெயர்களை தங்கள் மக்கட் செல்வங்களுக்கு மிக்க மகிழ்ச்சியோடு தாராளமாக சூட்டிக்கொள்ளலாம்.

சிறப்பு மிகுந்த பெயர்

"நிச்சயமாக நீங்கள் மறுமையில் உங்கள் பெயராலும் உங்கள் தந்தை யாரின் பெயராலும் அழைக்கப்படுவீர்கள். எனவே அழகான பெயர்களுடன் திகழுங்கள்" என்று நபிமணி (ஸல்) அவர்கள் மொழிந்தார்கள்.

தகவல் : அபூதர்தா (ரலி)

ஆதாரம் : அபூதாவூத்

இஸ்லாமியமுறை

" உங்களுக்குள் ஒருவரை ஒருவர் இகழ்ந்து பேசாதீர்கள். மேலும் ஒருவரை ஒருவர் (ஏளனப்) பெயர் சூட்டாதீர்கள். நம்பிக்கை (ஈமான்) கொண்டு விட்ட பிறகு பண்பாட்டுக்கு முரண்பட்ட செயல் பாவமாகும் ; (இச்செய்கைகளினின்றும்) கழிவிரக்கம் கொள்ளாதவன் (ஆண்டவன் இடம்) கொடுங்கோலன் ஆவான் "

திருக்குர்ஆன்—

இதனுள்

❋

முன் பக்கங்கள்	4
முதல் பாகம்	586
உச்சரிப்பது எப்படி?	4
பெண் பெயர்கள்	2
இரண்டாவது பாகம்	120
மொத்தப் பக்கங்கள்	716

முன் பக்கங்கள் I முதல் IV வரையிலும், ஆண் பெயர்கள், பெண் பெயர்கள் (இரு வண்ணங்களில்) ஆகியவையும், சென்னை என்என்ஜே பிரிண்டர்ஸில் அச்சிடப்பெற்றது.

பக்க எண் 9 முதல் 56, 91 முதல் 586 வரையிலும் சென்னை முத்துக்குமரன் பிரசில் அச்சிடப் பெற்றது.

பக்க எண் 1 முதல் 8, 57 முதல் 88, இரண்டாவது பகுதி 1 முதல் 120 வரையிலும், சென்னை ஜீவன் பிரசில் அச்சிடப்பெற்றது.

மேன்மைமிக்க ஜனாதிபதி ஜாகிர் ஹுசேன் அவர்கள்
வழங்கிய வாழ்த்துரை

ராஷ்டிரபதி பவன்
புது தில்லி-4.
4 ஜுலை 68.

மேன்மைமிக்கீர் !

அஸ்ஸலாமு அலைகும்.

அன்பு மடல் கிடைத்தது - நினைவு படுத்திக் கொண்டதற்கு நன்றி.

தாங்கள் முஸ்லிம் பெயர் அகராதி ஒன்றை தமிழ் மொழியில் எழுதி இருப்பதை அறிந்து மகிழ்ந்தேன். தங்களின் இந்தத் தொண்டு தமிழ் மொழி அறிந்த மக்களிடையே விரும்பப்படும் என்று நம்புகிறேன். ஆண்டவன் அருட்பேறு அளிப்பானாக. வஸ்ஸலாம்.

அன்புள்ள,
(ஒப்பம்) ஜாகிர் ஹுசேன்.

ஜனாப் முக்தார் சாஹெப்
17, சி. என். கே. ரோடு,
முதல் மாடி—சென்னை-5.

இன்றைய தேவை!

உலகம் சுற்றும் தமிழர்
திரு. "சோமலெ" அவர்கள்

அன்பர் முக்தார் அவர்களின் "முஸ்லிம் பெயர் அகராதி" என்ற நூல் இந்நாளில் மிகவும் தேவையான நூல்களுள் ஒன்று என்பது என் கருத்து.

பெயர்கள் காரணத்துடனேயே வைக்கப்படு கின்றன. பிறமொழித் தொடர்பு குன்றியிருப் பதால் அப்பெயர்கள் ஏற்பட்ட விவரம் தெரி யாமல் பலர் விழிக்கின்றனர். சமயத் தொடர்பு, சாதி வரலாறு, குடும்பத் தலைவர்க்குக் கட்டுப் பட்டிருப்பது ஆகிய யாவும் மறைந்து வருகிற சூழலில் நாம் வாழுகிறோம். எனவே வரலாறு படைக்கவும், ஆராய்ச்சி செய்யவும் இன்றைய நிலையை உணரவும் இத்தகைய நூல்கள் வெளிவர வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

இந்நாளில் எல்லாரும் ஒரே நிலையில் கல்வி கற்பதால் அரசு நடத்தும் பள்ளிகளில் ஏழை களும், கான்வென்டு முதலிய கல்வி நிலையங்களில் செல்வர்களும் தம் மக்கட் செல்வங்களைப் பயிலு விக்கின்றனர். இதனால் முன்னாளில் போலத் தம் பெற்றோர் வாயிலாகவோ, பரம்பரை ஆசிரியர் வாயிலாகவோ, எதையும் யாரும் அறிந்து கொள்ள வாய்ப்பில்லை. இந்நிலையில் நூல்கள் வாயிலாகவே, கேள்வியறிவைப் பெற வேண்டிய தேவையும் சூழலும் உருவாகியுள்ளன.

அன்பர் முக்தாரின் முயற்சி வெல்க!

அணிந்துரை

ஆலிஜனுப் எஸ்.எம். சுலைமான் சாஹெப் ஐ.ஏ.எஸ்.
(கலெக்டர், தருமபுரி மாவட்டம்)

(வள்ளல் சையத் காதிர் (சீதக்காதி) அவர்களின் பரம்பரையில் தோன்றி, தமது சீரிய நிர்வாகத்திறன், மக்களிடம் கொண்டுள்ள ஆழமான அன்பு, நெறி தவறாத பண்பு ஆகிய சிறப்புகள் காரணமாக பெரிதும் போற்றப்படும் ஆலிஜனுப் எஸ்.எம். சுலைமான் ஐ. ஏ . எஸ். அவர்கள் வழங்கியுள்ள இந்த அணிந்துரை. அவர் இயற்கைத் திறனுள்ள சிந்தனையாளர், சிறந்த எழுத்து வன்மையும் பெற்றவர் என்பதற்கும் ஓர் எடுத்துக் காட்டாக உள்ளது. தமது ஒய்விலா அலுவல் களுக் கிடையே, இதனை எழுதி வழங்கிய அவருக்கு நமது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்)

"பேரில் என்ன இருக்கிறது? ரோசா மலரை எப்பெயரிட்டு அழைப்பினும் அது நறு மணத்தையே கமழும்" என்பர். (What is there in a name? A rose, call it by whatever name, will still smell sweet.) ஆனால் உலக மாந்தர் தம் மக்கட் செல்வங்களுக்கு நல்ல பெயர்களைத் தேர்ந்தெடுத்து சூட்டுவதில் தொன்றுதொட்டு அக்கறை காட்டிவந்துள்ளார்கள். இந்துக்கள், பார்வதி பரமசிவன் போன்ற தெய்வப் பெயர்களையும் கிறித்தவர்கள் 'இயேசுடியான்' (இயேசு அடியான்) போன்ற பெயர்களையும், முஸ்லிம்கள் அப்துற்றகுமான் (ரஹ்மானின் அடியான்) 'அல்லாபிச்சை' போன்ற பெயர்களையும் இட்டு மகிழ்கின்றனர். தம் சேய்களுக்கு நல்லோர்களின் பெயர்களை நாடிப் புனைந்தால் அவர்களின் வாழ்க்

கையும் பண்பும் பயனும் உடையதாய் அமையாதா என்ற ஆசையே அதற்குக் காரணம்.

குக்கிராமத்திற்கு ஒரு மேதை வர நேர்ந்தால் தாய் தந்தையர் தம் சேய்களை அவர்கள் கைகளில் வீந்து நல்ல பெயர்களை நல்க விழைகின்றனர். இதனலன்றோ இந்நாள் 'காந்தி, ஜவஹர், காமராஜ், அண்ணுதுரை என்ற பெயர்கள் வழக்கத்தில் உள்ளன. கூறப் போந்தால் தற்காலத்தில் பெயர்களைக் குறுக்கிக் கொள்வதும் தூய தமிழில் பெயர்த்துக் கொள்வதும், நாகரீகம் என்று கருதுவாரும் உளர். 'குமாரசாமி' என்பது குமார் என்றும், "ஷம்சுத்தீன்" என்பது கதிரவன் என்றும் மாறிய நிலையில் உலவுகின்றன. 'செய்யது காதிர்' என்பது 'சீதக்காதி' என்று மருவியதையும் நாம் அறிவோம்.

இத்தகைய நிலையில் பெயர்களைப் பற்றிய பயனுள்ள ஆராய்ச்சியில் ஆழ்ந்து,

"எல்லாப் பெயரும் இதன்பால் உள
இதன்பால் இல்லாத எப்பெயரும் இல்லை"

என்று சொல்லத்தக்க வகையில் அன்பர் முக்தார் அவர்கள் "முஸ்லிம் பெயர் அகராதி" என்ற அரிய நூலைத் தொகுக்க முன் வந்தது பாராட்டுதற்குரியது. அல்லாஹ்வின் 99 எழிலுடைய நாமங்களை நம்மவர் 'அஸ்மாவுல் ஹுஸ்னு' என்றழைப்போம். இறைவனின் திருநாமங்கள் நினைவு கூறப்பட்டால் அடியவர்களின் நெஞ்சங்கள் நிம்மதி பெறுகின்றன" (குர்ஆன் 13—28)

நண்பர் முக்தார் அவர்களின் நாமக் கோவையை நலமோடு பயின்று நல்ல பெயர்களை நம் குழந்தைகட்கு நாடிப் புனைந்து நன்மையடைவோமாக.

தர்மபுரி,
14-11-68.

அன்பன்,
எஸ். எம். சுலைமான் ஐ.ஏ.எஸ்.

விருப்பத்திற்குரியவர்

மனிதன் தன்னையும், தனது சுற்றுச் சூழலையும் உணர்ந்து தெளிந்ததன் அறிகுறியாக, தன்னை உலகத்தோடும், உலகின் பல்துறை வளர்ச்சிகளோடும் ஒன்றுபடுத்தும் பிணைப்பாக, எல்லா திக்குகளிலும் துறைகளிலும் முன்னேற வேண்டும் என்ற நோக்குடன், தனக்கும் தன்னைச் சூழ்ந்து நிற்கும் உலகிற்கும் சூட்டிக்கொண்ட ஒன்றேபெயராகும். எந்தப் பெயராயினும் அந்தப் பெயர் மனிதரின் அறிவு முதிர்ச்சியை—அறநோக்கத்தை—அகத்தூய்மையை ஒலிவழியே வெளிப்படுத்துவதாய் அமைய வேண்டும் என்பது மனித இனத்தின் விருப்பமாய் இருந்து வருகிறது.

விருப்பத்திற்குரியர்—முக்தார்—தொகுத்துள்ள எபிரேய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த அரபு, பாரசீக மொழிகளில் வழங்கும் இப்பெயர்கள் மனிதரின் அறிவு முதிர்ச்சியையும் நன்னோக்கையும் வெளிப்படுத்துகின்றன. அவற்றில் காணப்படும் உள்ளோட்டமான உயர்ந்த சிந்தனை நம்மை வியப்பிலாழ்த்துகிறது. அவற்றின் ஒலி நயங்களுக்குள் மனித வாழ்க்கையில் தெளிவை உண்டாக்கும் ஆதார சுருதிகள் இசைமணம் கமழ வெளிப்படுகின்றன.

முக்தார்—விருப்பத்திற்குரியவர்.

● ப. சி. அ. வணங்காமுடி
(பிரபல தமிழ் எழுத்தாளர்)

அவர் விருப்பம்

இந்தியாவின் உருது எழுத்தாளர்களில் மிகவும் சிறந்தோரின் அணியில் முக்தார் திகழுகிருர். அவர் அருந்திறன் வாய்ந்த பிறவி எழுத்தாளர்க்குரிய நயத்தோடும் சரளமாகவும் எழுதுகிருர். அவர் எதை எடுத்துக்கொண்டு எழுதினுலும் அதை மிகவும் நுட்பமான முறையில் வெளியிடுகிருர். அவரது கருத்து நம்மை வியப்பூட்டும் வகையில் பிணித்துவிடுகிறது. அவரது எழுத்திற்கு தனிக்கவர்ச்சி வாய்ந்த புகழொளி பிறங்குகிறது. முக்தார் கட்டுரையோ, சிறுகதையோ, நையாண்டியோ எதை எழுதினுலும் சரி, அதில் சிந்தனை ஆற்றலும், சொல்லழகும், கற்பனை வளமும், புதுமையான முறையில் நிறைந்து, இருக்கின்றன. அவர் இன்றைய எழுத்தாளர்களில் உத்வேகத்தோடு எழுதுபவராக இருக்கிருர்; காலப் போக்கில் அவர் எழுத்தாளர்களின் எழுத்தாளராகும் சிறப்பைப் பெறுவார்.

● மானிக்-ஜி. ஷாஹானி
(பிரபல ஆங்கில எழுத்தாளர்)

பதிப்பாளர் வார்த்தை

அழகான சின்னஞ்சிறு குழந்தை ஒன்றைக் கண்டதும் நாம் மனமகிழ்ந்து "குழந்தையின் பெயர் என்ன?" என அதன் பெற்றோரிடம் கேட்கத் தொடங்குகிறோம். பாலப் பருவமானால், "உன் பெயர் என்ன?" என்று நேராகவே கேட்டு விடுகிறோம், ஏன்? குழந்தையின் முதல் அம்சம் பெயர்! இந்தப் பெயர் எதற்காக? பெயரைச் சொல்லிக் கூப்பிட்டால் உரு ஏறும்; உரு ஏறஏறத் திரு ஏறும் என்பது பெரியோர் வாக்கு.

நாள் தோறும், புகழ்மிக்க—பொருள் நிறைந்த அழகுப் பெயர்களை உச்சரிப்பதன் மூலம் குழந்தைச் செல்வங்கள் குணம், ஒழுக்கம், அறிவு, பண்பு, செய்கை, சிந்தனை ஆகியவற்றில் சிறந்து மென்மையாகத் திகழ வேண்டும் என்ற அடிப்படை நோக்கமே காரணமாகும். இந்த நல்லெண்ணம் ஒவ்வொரு பெற்றோரிடமும் உண்டாவது இயல்பே ஆகும். இதில் ஏழை—செல்வந்தர் என்னும் வேறு பாட்டிற்கு இடமே இல்லை.

சிலர், தம் அருமைக் குழந்தைகளுக்கு ஆண்டவனின் திரு நாமங்களையும் அவனுடைய அடியார்களுடைய திருப் பெயர்களையும் சூட்டி, ஆண்டவனின் எல்லையற்ற கருணைக்கு ஆளாகிக் கொள்ள முற்படுகின்றனர். மற்றும் சிலர், தம் மூதாதையர்களின் நினைவாக அவர்களுடைய பெயர் களைத் தம் மக்களுக்குச் சூட்டி அக மகிழ்கின்றனர்.

இன்னும் சிலர், தேசத் தலைவர்கள், சரித்திரப்புகழ் பெற்ற நாயகர்கள், செயற்கரிய செய்த பெரியார்கள் ஆகியோரின் பெயர்களை இட்டு ஆனந்தப் படுகின்றனர். மேலும் சிலர், நாகரிகம் என்று எண்ணிக் கொண்டு, மனம் போனபடி புதுமை என்னும் கருத்தில் பொருளற்ற பெயர்களையும் பொருந்தாத பெயர்களையும் சூட்டுவதோடு, ஆண்டவன் — அவன் அடியார் பெயர்களை சுருக்கி [துண்டித்து] வைத்து பெருமிதம் கொள்கின்றனர். இதனல் விளையும் நன்மை என்ன? தீமை எது? என்பனவற்றை அவர்கள் சிந்தித்துப் பார்த்து உணரத் தவறி விடுகின்றனர். ஆனல், அவர்களைக் குறை சொல்வதிலோ குற்றம் சாட்டுவதிலோ பயன் இல்லை. ஏன் எனில். அவர்களில் பலர் போதிய அறிவு வளர்ச்சி பெருததோடு, இத் துறையில் அவர்களுக்கு வழி காட்டக்கூடிய நூல்கள் ஏதும் இல்லாமையே ஆகும்.

ஆண்களாயினும் பெண்களாயினும் இளைஞர்களாயினும் முஸ்லிம்களிடையே வழங்கப்படும் பெயர்களுக்கு பொருள் தெரிந்து கொள்வதற்கும், தம் மக்கட் செல்வங்களுக்கு அழகான பொருள் நிறைந்த பெயர்களைச் சூட்டி மகிழ்வதற்கும். வியாபார நிறுவனங்களுக்கு ஏற்ற மிகு எழில் நிறைந்த பெயர்களை அமைத்துக் கொள்வதற்கும் வழிகாட்டி உதவி புரியக்கூடிய அரியதொரு நூல் ஒன்றை அகராதி வடிவில் உருவாக்க வேண்டும் என்று புத்தகத் துறையில் நீண்டகால அனுபவமும் மிகுந்த அறிவும் படைத்த என் அருமை நண்பர் உயர்திரு முல்லை பி. எல். முத்தையா அவர்கள் என்னைத் தூண்டவே, நானும் இதன் தேவையையும் முக்கியத்துவத்தையும் உணர்ந்து இதைச் செயல்படுத்த

அவருடைய ஒத்துழைப்பை நாடினேன். அவர் அன்பர் முக்தார் அவர்களை அறிமுகப்படுத்தி, இந்த 'முஸ்லிம் பெயர் அகராதி'யினை உருவாக்கும் பணியை தெரிவித்த உடன் அவர் ஊக்கமும் உற்சாகமும் கொண்டு பல மாதங்களாக விடா முயற்சியுடன் இதற்கான பல மார்க்க ஆதாரங்களையும் சேகரித்து ஆராய்ந்து உருவாக்கித் தந்தார்.

அன்பர் முக்தார் அவர்கள் கவிஞர், எழுத்தாளர், நூல் ஆசிரியர், கதை, வசன கர்த்தா, பத்திரிக்கையாளர். பிரசித்தி பெற்ற அறிஞர் கே. ஏ. அப்பாஸ் அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பவர். அரபி, உருது, பார்சி, ஹிந்தி, ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் புலமை மிக்கவர். அத்துடன் மார்க்க—மத விஷயங்களிலும் ஆழ்ந்த ஆராய்ச்சி உடையவர். உலகின் பல்வேறு பேரறிஞர்களுடன் தொடர்பு கொண்டவர். மிக இள வயதில் அவர் நுண்ணறிவோடு கூடிய புலமையும் ஆராய்ச்சித் திறனும் பெற்றிருப்பது ஆண்டவன் அவருக்கு அளித்திருக்கும் ஒப்பற்ற பரிசாகும்!

பிரசித்தி பெற்ற தமிழ் எழுத்தாளர் பலரின் படைப்புகள் பலவற்றை உருதுவிலும் ஹிந்தியிலும் வெளியிட்டுப் புகழ் சேர்த்திருக்கிறார்.

பன்மொழிப் புலமை உடைய முக்தார் அவர்கள், மிக ஆர்வத்தோடு சலியாத உழைப்பினைக்கொண்டு, பல நூல்களை ஆராய்ந்து, பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பெயர்களைச் சேகரித்து தொகுத்து அதற்கு நல்ல தமிழில் விளக்கம் எழுதியிருப்பதோடு, வழங்கி வரும் பெயர்கள் யாவும் எந்த மொழியைச்

சேர்ந்தவை என்ற குறிப்பும் கொடுத்திருப்பதோடு, பெயர்களை எவ்வாறு உச்சரிக்க வேண்டும் என்னும் ஒலிக்குறிப்பையும் காட்டி, பெயர்களுக்கான விரிவான ஆராய்ச்சி முன்னுரை ஒன்றையும் வழங்கியுள்ளார்.

இந்த "முஸ்லிம் பெயர் அகராதி" உருவாகும் போது, எனக்கு ஏற்பட்ட சந்தேகங்களுக்கும், நான் கேட்ட கேள்விகளுக்கும் பொறுமையோடும் புன்முறுவலோடும் ஆதார பூர்வமான விளக்கம் கூறி, நூலின் சிறப்பு ஒன்றே பெரிது எனக் கருதி, இவ்வளவு சிறப்பு மிகுந்த அரிய நூலாக வெளிவரத் துணை புரிந்த அன்பர் முக்தார் அவர்களை எவ்வளவு போற்றினாலும் தகும்.

மேன்மை மிக்க ஜனாதிபதி டாக்டர் ஜாகிர் ஹுசேன் அவர்கள் வாழ்த்துரையை வழங்கி பெரிதும் ஊக்கம் ஊட்டினார்கள். அவர்களுக்கு என்னுடைய இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மார்க்க சம்பந்தப்பட்ட பல சந்தேகங்களுக்கு விளக்கங்கள் தந்து பெரிதும் உதவி செய்த தாருல் உலூம், (தேவ்பந்த்) மதரஸயே பாகியாதுஸ் ஸாலிஹாத் (வேலூர்) ஜாமிஆ தாருஸ்ஸலாம் (உமராபாத்) ஆகிய நிறுவனங்களின் தலைவர்களுக்கும் என்னுடைய நன்றி!

இம் முயற்சிக்கு நண்பர் முல்லை பி. எல். முத்தையா அவர்கள் தாம் மூலகாரணமாவார். இந் நூலின் தயாரிப்பிலும் எனக்கு ஒத்துழைப்பை அளித்த அவருக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இம்மாதிரி நூல் வேறு எந்த மொழியிலும் இது காறும் வெளிவந்ததில்லை என்பதோடு, தமிழில் இது முதல் முயற்சி, அரிய படைப்பு என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படு கின்றேன்.

ஆண்டவனின் திருவருளால் இந்நூல் உருதுவி லும் ஆங்கிலத்திலும் விரைவில் வெளிவரக்கூடிய தருணத்தில் உள்ளது எனும் நற்செய்தியை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இதைத் தொடர்ந்து மார்க்க சம்பந்தப்பட்ட பல பயனுள்ள நூல்களை வெளியிடவும் திட்டமிட்டு இருக்கிறேன்; அன்பர்கள் இந்த முயற்சியை வர வேற்பார்கள் என்றும் ஆவல் கொண்டு இருக் கிறேன்.

எஸ். முஹம்மத் இப்ருஹீம்
பதிப்பாளர்

உங்கள் பெயர்

பெயர் என்பது உலக பந்தபாசத்தின் முதல் வளையம் என்று மிக எளிதாகச் சொல்லி விடலாம். "நீங்கள் யார்" என்ற வினவும் அதற்குரிய விடையும்தான் அறிமுகத்தின் அடிப் படையாக அமைகின்றன. எனவே, ஒவ்வொரு வருக்கும் ஒரு பெயர் இருப்பதும், மேலும் அது இனிமையாக ஒலிக்கும் பெயராக இருப்பதும் மிகவும் அவசியமாகிறது.

ஒருவருடைய சொந்தப் பெயரானது அவ ருடைய முக்கியமான உடைமையாகும். எனவே, பிறர் கவனக்குறைவால் அதைத் தவருக உச்சரிப்ப தையோ அல்லது பிழையாக எழுதுவதையோ எவருமே விரும்பமாட்டார்கள்.

பண்டைக் காலத்தில் ஒவ்வொரு பெயரும் அதற்கு உரியவருடைய முழுமையின் ஒரு பகுதியாக மதிப்பிடப்பட்டது. பெயர்சூட்டு விழாவுக்கு முன்பு, பெற்றோர்கள் தங்கள் புதிய குழந்தைக்கு அதன் பெயரால் அழைக்காமலும், குழந்தைக்கு இன்ன பெயர் தான் வைக்கப்போகிறோம் என்பதை நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் தெரிவிக்கா மல், அதை இரகசியமாகக் காப்பாற்றி வந்தார்கள். ஏனெனில், அந்தப் புதுமலர்ச்சி விழாவுக்கு முன்பு வனதேவதைகள் குழந்தையை கவர்ந்துச் சென்று விடுமோ என்று மக்கள் அஞ்சினர்கள். எனவே, அந்த வனதேவதைகள் குழந்தையைப்பற்றி

எவ்வளவு குறைவாக அறிந்து கொள்ளுமோ அதுவே நலம் என்றும் கருதினர்கள்.

பண்டைக் காலத்தில் ஒருவருக்கு புதிய பெயர் ஒன்றை வழங்குவதானது அவர்மீது முற்றிலும் புதிதான தனிமனிதப் பண்பும் குணவியல்பும் அமையப்பெற்றதாக நினைக்கப்பட்டது. துறவிகளும் அறநங்கையரும் தங்களின் சொந்தப் பெயர்களைத் துறந்து, மறந்து, புதிய பெயரை அற வாழ்விற்கு ஏற்றவாறு அமைத்துக்கொண்ட பிறகே அங்கீகரிக்கப்பட்டனர். இந்த புதிய பெயர்களே அவர்களுடைய புதிய அறப்பண்பின் அறிகுறி என்றும் கருதப்பட்டு வந்தது.

இதற்கு முற்றிலும் மாருக தோற்றத்துக்கும் குணத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லாத, பல பெயர்களின் உதாரணங்களை தினமும் நாம் காண்கிரேம். அறிவற்றவன் ஒருவன் ‘ ஹகீம் ’ (அறிஞன்) என்ற பெயருடன் திகழுவதையும், குரூபியான ஒருவன் ‘ ஜமீல் ’ (எழிலரசன்) என்ற பெயர் சூட்டிக்கொண்டு இருப்பதையும் பார்க்கத்தான் செய்கிரேம். எனவே “பெயரில் என்ன இருக்கிறது? ” என்று சிலர் வாதிக்கத் தொடங்கினர்கள். மல்லிகைக்கு எந்தப் பெயரை வழங்கினலும் அதன் நறுமணம் மாருது; இயல்பான மணத்துடனே அது திகழும் என்பது உண்மையான வாதம் என்ருலும், அந்நிலையிலும் கூட, ஒவ்வொரு பொருளுக்கும், ஒவ்வொரு நபருக்கும் ஒரு பெயர் இருப்பது அவசியம் என்பதை மறுக்க இயலாது அல்லவா ?

ஆனல், பெயருக்கு பதிலாக புதுமையான எண்முறையை வழக்கத்திற்கு கொண்டுவர முடியும்

என்ற வாதமும் இருக்கிறது. அந்தந்த நகரங்களில் அந்தந்த ஆண்டுகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு அரசாங்கமுறையில் செ/605/66, ப/738/67, க/8765/68 என்று பதிவுசெய்து அந்த இலக்கத்தையே குழந்தைக்கு அளித்துவிடலாம். (மருத்துவ மனையில் பிறக்கும் குழந்தைகளுக்கு எண்முறையை உபயோகிக்கின்றனர். சிறைச்சாலையிலும் எண்களைக் கொண்டே வழங்கி வருகின்றனர்.) இது ஜனநாயக, சமதர்ம அடிப்படையில் உதித்த கற்பனைதான். எனினும், இதிலும் ஒரு சிக்கல் இருக்கவே செய்கிறது. பெயரைக் கொண்டு ஒருவரின் குணத்தை அறிந்து கொள்ள முடியாது என்பதுபோல், இலக்கத்தை கொண்டும் அவரைப்பற்றி எதுவுமே தெரிந்து கொள்ள இயலாது. அவரது இனத்தையும், மதத்தையும் அறிந்து கொள்ள முடியாது. புதிய சமுதாயத்தில் மதத்திற்கு முக்கியத்துவம் கூடாது என்று சிலர் வாதிக்கலாம். ஆனால், மதம் ஒரு வெறியல்ல; அஃதொரு சீரான வழி, ஒரு அவசியமான கட்டுப்பாடு என்று எண்ணுபவர்கள் மேற்காணும் இலக்கமுறையை ஏற்றுகொள்ள முடியாது. ஒழுங்கான கட்டுப்பாடு ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியம்தானே!.

எண்முறையில் வேறொரு பெரிய சிக்கலும் இருக்கிறது. பெயருக்கு உரிய எண்களில்தான் எல்லாமே அடங்கி இருக்கிறது என்கிறது வரிவடிவ சாஸ்திரம். குறிப்பிட்ட நபருக்குக் கிடைக்கும் இலக்கம் அவருக்குச் சாதகமாக அமையாவிட்டால் என்ன நடக்கும்? இப்பொது வாழ்வில் தோல்விகளையே காணும் பலர், சாதகமான எண்ணுக்குரிய பெயர் மாற்றத்துடன் வெற்றிகளை விளைவித்து விட

முடியும் என்று, பல மேற்கோள்களை வரிவடிவ நூல் எடுத்துக் காட்டுகிறது. இதை நம்புகிற அன்பர்கள் இலக்கமுறையை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். மேலும் "பேரும் புகழும் பெற்றுத் திகழு" என்ற வாழ்த்துரையை "எண்ணும் புகழும் பெற்றுத்திகழு" என்று மாற்றினால், அத்துணை கிளர்ச்சியும் துடிப்பும் இருக்க முடியாது.

ஆண்டவன் ஆதமைப் படைத்து எல்லாப் பொருள்களின் பெயர்களையும், அவற்றின் குணங் களையும் அவருக்கு போதித்தான் என்று திருக்குர் ஆன் உணர்த்துகிறது. எனவே, ஆரம்பம் முதற் கொண்டே பெயரிடும்முறை இருந்து வருகிறது என்று உறுதியாகச் சொல்ல முடிகிறது.

> "மேலும் ஆதமுக்கு எல்லாப் பெயர் களையும் கற்பித்தோம். பிறகு அந்தப் பொருள்களை வானவர்களுக்கு முன் னால் வைத்தோம்—நீங்கள் வாய்மை யாளர்களாக இருப்பின் இவற்றின் பெயர்களைச் சொல்லுங்கள் என்று பணித்தோம்—நீ தூயவன்—நீ கற்பித் ததைத் தவிர வேறு எதையும் நாம் அறியமாட்டோம். ஐயமின்றி யாவும் நீ அறிந்தவன்; அறிஞன் என்று (அவர்கள்) கூறினார்கள்."
>
> திருக் குர்ஆன் 2:30-32.

எழுத்தாளன் தனது படைப்புக்குத் தலைப்பு தருவதுபோல், தான் படைத்த சகல பொருள்களுக் கும் இறைவன் தகுந்த பெயர்களை சூட்டிவிட்டான்.

இவ்வாறே உலகில் மனிதனும் தேனினும் இனிய மழலைச் சொற்களை உதிர்க்கும் குழந்தைச் செல்வங்களுக்காக அழகான பெயர்களைத் தேர்ந்தெடுப்பதில் பெரிதும் அக்கறை கொள்வது இயற்கையே.

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'— என்று தொல்காப்பியம் கூறுகிறது என்றாலும் நல்ல பொருள் குறிக்கும் சொற்களை வழங்கும் முறையைக் கையாள்வது சிறப்பானது. எதையும் சொல்லத் தொடங்கும்போது நல்ல வார்த்தையாக—மங்களச் சொல்லாக அமையவேண்டும் என்று விரும்புவது எல்லாருக்கும் பொதுவான இயல்பாகும். உதாரணமாக "அவர் இல்லையா?" என்பதைக் காட்டிலும் "அவர் இருக்கிறாரா?" என்பது நல்ல வார்த்தையாகும்.

எனவே, மனித வாழ்வின் முதல் சொல்லான அவன் பெயரும் சிறந்ததாக இருக்கவேண்டும் என்பது மிகவும் முக்கியமானது.

ஆனால், இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் எல்லாப் பெயர்களும் சரியானவைதானா என்ற கேள்வி உடனே தோன்றுகிறது! உயர்தனி அறிவும், முதிர்ந்த அனுபவமும் படைத்த மதிப்பு மிக்க அன்பர் முல்லை பி.எல். முத்தையா அவர்களின் சிந்தனையில் இந்த வினா எழுச்சி பெறவே, அவரது தூண்டுதலின்பேரில் ஆராய்ச்சியும் துவங்கியது— அதன் விளைவாக பல உண்மைகள் வெளிவந்தன :

★ ஒரு நண்பர் தம்முடைய பெண் குழந்தைக்கு 'சாயிகா' என்று பெயரிட்டு இருக்கிறார். 'சாயிகா' என்றால் "பூமியின்மீது விழும் மின்னல், மரணம்"

என்று பொருள். எனவே, அதைப் பெயராக்கிக் கொள்வது தவறு என்று கூறினுல் அவருக்குப் புரிய வேண்டாமா? இதைப்போலவே கம்கீன் பேகம் (துக்கமடைந்த பெருமகள்) ஹஜீனு பானு (சோக மங்கை) ஆகிய பெயர்களும் இருக்கின்றன!

★ ஏதேனுமொரு அரபி - பார்ஸி அல்லது உருது வார்த்தையைத் தங்கள் மக்கட் செல்வங்களுக்குப் பெயராகச் சூட்டிவிடவேண்டும் என்ற துடிப்பு தென்னகத்தில் மிகுதியாக காணப்படுகிறது. சிலர் இரண்டு பெரிய அரபி வார்த்தைகளைச் சேர்த்து பெயராக்கிக்கொண்டு அதை உச்சரிக்க முடியாமலும், பொருளும் தெரியாமல் திணறுகிருர்கள். மேலும் நடைமுறையில் அம்மாதிரிப் பெயர்கள் உருமாறியும் இருக்கின்றன. 'ரைஹானத்துர் ரபீய்யா,'' மலீக்கா தம்ரத்துல் புஆதுன் என்பது போன்ற பெயர்களை கொண்டும் இருக்கின்றனர். பொருள் தெரியாத அறியாமையால் நிகழும் தவறுகளை குறித்து நாம் அனுதாபப்படாமல் வேறு என்ன செய்வது?

★ வடநாட்டில் ஏழை எளியவர் வட்டாரங்களில் கேலிப் பெயர்கள், கசீடா—ஷப்ராதி—ஜும்மன்—ஜுமேராதி—நஹ்ன்னு—குல்லு—முன்னு போன்றவை பொதுவாகவே காணப்படுகின்றன. நாகரிகமான குடும்பங்களிலோ திரைப்பட நடிக நடிகையர், இசைவாணர்கள் ஆகியோரின் பெயர்களே (மீனு குமாரி, நிம்மி, திலீப்) குழந்தைகளுக்கும் வழங்கப்படுகின்றன.

★ அறியாமையின் இருளிலும், நாகரிகத்தின் ஒளிமிக்க வளிமண்டலத்திலும் பார்வைக் குறைவு ஏற்படுவது இயற்கை. ஆனுல், நடுத்தர வகுப்பினர்

மத்தியிலும், கல்வியறிவு படைத்த மக்களிடையிலும் கூட பல தவறுகள் இருக்கத்தான் செய்கின்றன. "ஆண்டவன் ஒருவனே, அவனுக்கு இணை வைப்ப தில்லை. அவனைத் தவிர வணக்கத்திற்குரியவர் எவருமில்லை" என்ற உயர்ந்த கொள்கையை கடைப் பிடிக்கும் நாம், அப்துல் ஹசன் (ஹசனின் அடிமை) அப்துல் ஹுசேன் (ஹுசேனின் அடியான்), அப்துல் முதல்லிப் (முதல்லிபின் அடிமை), அப்துல் காபா (காபாவின் அடியான்), அப்துல் முனைப் (முனைப்பின் அடிமை) என்ற பெயர்களை வைத்துக் கொள்கிறோம், இறைவனின் குணப் பெயர்களுடன் மட்டும் 'அப்த்'ஐச் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்பது பெரும்பான்மையோருக்குத் தெரியவில்லை.

★ சிலர் சிறப்புப் பெயர்கள் அல்லது காரணப் பெயர்களையே இயற்பெயர்களாகச் சூட்டிவிடுகிறார் கள். இவர்கள் எதிலும் அரபு மக்களைப் பின்பற்றி விடவேண்டும் என்று துடிப்பவர்கள். காரணப் பெயர் (குனியத்) என்பது தந்தை—தாய்—மகள்— தனயன் ஆகியோரில் ஒருவரைச் சார்ந்த முறையில் ஒரு துணைப்பெயரை வைத்துக்கொள்வதுதான். தனயனின் பெயர் 'ஜமால்' என்றால் தந்தையை "அபுஜமால்" (ஜமாலின் பிதா) எனலாம். தந்தை யின் பெயர் மஸ்ஊத் என்றால் தனயனை "இப்னே மஸ்ஊத்" (மஸ்ஊதின் மகன்) என்று அழைக்க லாம். குல்ஸுமின் அன்னையை "உம்மே குல்ஸும்" என்றும், ஹாரிஸின் மகளை "பின்த் ஹாரிஸ்" என்றும் சொல்லலாம். இவற்றைத் தவிர புனைப்பெயர் பாணியில் பல சிறப்புப் பெயர்களும் உண்டு. அபுல்கலாம் (பேச்சின் தந்தை) அபுல் பயான் (சொல்லின் தந்தை) அபுதுராப் (மண்ணின்

தந்தை) போன்றவை இத்தொடர்ச்சியில் வருகின்றன. இவை சிறப்பிற்குரிய பெயர்கள் தாம் அபுல் கலாமின் சொந்தப் பெயர் முஹியத்தீன் அஹ்மத் என்றும், அபூபகர் (ரலி) அவர்களின் உண்மைப் பெயர் அப்துல்லாஹ்வாகவும், அபூதுராபின் இயற் பெயர் அலி(ரலி) ஆகவும் இருந்தது. எனவே, புனைப் பெயர், சிறப்புப் பெயர், பட்டப் பெயர், குடும்பப் பெயர் என்று பல துணைப்பெயர்கள் இருந்தாலும், ஓர் உண்மைப் பெயர் அவசியமாகிறது. சிறப்புப் பெயர்களை சொந்தப் பெயர்களாகவே வைத்துக் கொள்வது தவறு அல்ல என்றாலும் இந்திய முஸ்லிம்கள் வேறு நல்ல பெயர்களைத் தேர்ந்தெடுத்துச் சூட்டிக்கொள்வது சிறப்பானது.

★ தமிழ் முஸ்லிம்களிடையே ஷெய்க்கு நாயனர் (நாயன்: இறைவன்!), அல்லாபிச்சை, வெள்ளையப்ப ராவுத்தர். நெய்னு முஹம்மது, சையது லெப்பை, முத்துபீபி, சபூரா நாச்சியார், நலலதம்பி போன்ற பல தமிழ்ப் பெயர்களும், தமிழும் அரபியும் கலந்த பெயர்களும் நிறைய இருக்கின்றன. மேலும் ஒவ்வொருவரும் பெயரைச் சூட்டும்போது, அதன் பொருள் அறிந்து தேர்ந்தெடுத்துச் சூட்டுகிறார்களா என்பதுதான் இப்போதைய கேள்வி!...

இந்த உண்மைகளின் காரணமாக முஸ்லிம் பெயர்களும் அவற்றிற்குரிய பொருள்களும் அடங்கிய ஒரு நூல் தேவை என்று வலியுறுத்திய அன்பர் முல்லை பிஎல். முத்தையா அவர்களும், அதை செயல் படுத்த முனைந்த ஜனப் எஸ். முஹம்மத் இப்ரு ஹீம் சாஹெப் அவர்களும் ஆழ்ந்த நம்பிக்கையுடன் கடந்த ஆண்டின் (1967) இறுதி நாளில் என்

னிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைத்தனர். மேலும் தாங்கள் கண்ட கனவுக்கு வண்ணம் தீட்ட முழு ஒத்துழைப்பும் தந்து (கால தாமதத்திற்கும் பொறுமை காட்டி!) என்னைப் பெரிதும் ஊக்குவித்தனர். அவர்களுக்கும், இதற்கான குறிப்புகளைச் சேர்ப்பதில் பெரிதும் உதவியாக இருந்த ஜனாப் முஹம்மத் நசீருத்தின் நஜீர் (சென்னை) ஜனாப் பி. அக்பர் பாஷா (பம்பாய்) ஆகிய நண்பர்களுக்கும் நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

இதே 'முஸ்லிம் பெயர் அகராதி' விரைவில் உருதுவிலும், ஆங்கிலத்திலும் வெளிவரப் போகிறது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந் நூலில் ஏதேனும் குறைகள்கண்டு எடுத்துச் சொன்னாலும் அல்லது ஆலோசனைகள் கூறினாலும் தக்கவாறு திருத்திக்கொள்ளச் சித்தமாயிருக்கிறேன்.

ரஹமதுல்லா தெரு,
கிருஷ்ணகிரி
15 மே '68

முக்தார்



பெயரும் விளக்கமும்

கிரேக்க முறை: கிரேக்கர்கள் குழந்தை பிறந்து ஏழாவது அல்லது பத்தாவது நாளில் குழந்தைக்குப் பெயரிட்டனர். தந்தை அந்தப் பெயரைத் தேர்ந்தெடுத்தார். எனினும் குழந்தை பெரியவனான பின்னர் அதை மாற்றிக்கொள்ளும் உரிமையும் அளிக்கப்பட்டது. வழக்கப்படி முதல் பையனுக்கு தந்தை வழியாக வந்த பாட்டனாரின் பெயரும், அடுத்த குழந்தைகளுக்கு இதர வம்ச பரம்பரையினரின் பெயர்களும் சூட்டப்பட்டன. மணமாகாத மங்கை தந்தையின் மகளாகவும், மணமான பெண் கணவனின் மனைவியாகவும், கைம்பெண் அவளது மகனின் அன்னையாகவும் வர்ணிக்கப்பட்டாள். கிரேக்க அடிமைகளுக்கு சின்னஞ்சிறு பெயர்களும், அதுவும் பெரும்பாலும் அஃறிணையான பெயர்களே வழங்கப்பட்டன.

ரோமானிய முறை: ஆண்குழந்தைகளுக்கு ஒன்பதாம் நாளைக்குப் பிறகு பெயர் சூட்டப்பட்டு, அது நகர வாசிகளின் அரசாங்கப் பட்டியலில் பதிவு செய்யப்பட்டது. துணைப்பெயரைப் போன்றதொரு புனைப்பெயர் அந்தக் கோத்திரம் அல்லது கூட்டுக் குடும்பத்தைச் சார்ந்த (Gen or clan) எல்லா அங்கத்தினர்களுக்கும் பொதுவாக இருந்தது. பிற்காலத்தில் ஒருவருக்கு வழங்கும் அடைமொழி இறுதியில் அவரது கிளைக் குடும்பத்தின் துணைப்பெயராக மாறிவிடும்.

ஒரு ரோமானியனின் பெயர் அவனது மூன்று புனை பெயர்களுடன் (Praenomen, Nomen, Cognomen) தந்தையின் பெயரும், குடும்பத்தின் துணைப் பெயரும் சேர்ந்தால்தான் முழுமை ஆக முடியும். சட்டப்படி (Praenomen) அடைமொழியும் Nomen புனைபெயரும் முக்கியமானவையாகக் கருதப்பட்டன.

ஒரு தனி மங்கை தந்தையின் குடும்பப் பெயருடன் ஒரு சிறு பெயரை முன்பாகச் சேர்த்து அழைக்கப்பட்டாள். மணமான பெண் அவளது சொந்த Nomenவுடன் கணவனின் Nomenஐயும் சேர்த்து அழைக்கப்பட்டாள்.

ஆங்கிலேயர் முறை: பழங்கால ஆங்கிலேயர்கள் மோனை அமைப்பில் பெரிதும் கவனம் செலுத்தினர். ஒரு குடும்பத்தில் மூன்று பெண்கள் இருந்தால் அவர்களுடைய பெயர்களின் முதல் எழுத்து ஒன்றாக இருக்கவேண்டும் என்பதில் அக்கறை காட்டினார்கள். சுருக்கெழுத்து (இனிஷியல்) முறை அப்போது அதிகமாக வழக்கத்தில் இருக்கவில்லை. எனவே குழப்பங்களும் ஏற்படவில்லை. பிற்காலத்தில் பிரபல, அறிஞர்கள். அரசியல் வாதிகள் ஆகியோரின் பெயர்களும், பிறகு நாகரிகம் வளரவளர பாடகர்கள், நடன ராணிகள், திரை நடிக நடிகையர் ஆகியோரின் பெயர்களும் குழந்தைகளுக்குச் சூட்டத் தொடங்கினர்!

யூதர் முறை: ஆண்குழந்தையாக இருந்தால் பிறந்த எட்டாவது நாளில் சுன்னத்து ஆசாரத்தின் போது பெயர் சூட்டு விழாவும் நடைபெற்றது. பெண் குழந்தையாக இருந்தால் வசதியைப்

பொறுத்து, அதாவது தாய் 'சினகோக்'கிற்குச் (யூதர் ஆலயம்) செல்வதற்குரிய உடல்நலம் பெறும்போது பெயரிடும் சிறப்புக் கொண்டாட்டம் நடந்தது.

பெரும்பாலும் மரபு வழக்கப்படி பெயர்கள் தேர்ந் தெடுக்கப்பட்டன. சில வகுப்பினர்கள் தங்கள் முதல் பையனுக்கு தந்தைவழிப் பாட்டனுரின் பெயரையும், இரண்டாவது பையனுக்கு தாய்வழிப் பாட்டனுரின் பெயரையும், இதர குழந்தைகளுக்கு வம்ச உறவினர் களின் பெயர்களையும் சூட்டினுர்கள்.

சமயப்பற்றுடைய பெயர் சூட்டு விழாவின்போது அவர்களின் மறைநூல் சம்பந்தப்பட்ட 'ஹெப்ரு' பெயர் ஒன்று குழந்தைக்கு வைக்கப்படும். எனினும் அநேக யூதக் குழந்தைகளுக்கு இரண்டாவது பெயராக புதுமையான பெயர் ஒன்றும் அளிக்கப்படு கிறது. இந்தப் பெயர்களால்தான் அவர்கள் பொது வாக தெரிந்து கொள்ளப்படுகிருர்கள்.

அரேபியர்கள் பொதுவாகவே தங்கள் பெயர் களுடன் தங்கள் தந்தையின் பெயர்களையும் இணைத் துக்கொள்கிருர்கள். ஜைத்பின் ஹாரிஸ் (ஹாரி ஸின் மகன் ஜைத்), சுஹேல் இப்னே மஸ்ஊத் (மஸ்ஊதின் மகன் சுஹேல்) அக்ரம பின் துபேல் (துபேலின் குமாரன் அக்ரம்) என்ற முறையில் ஆண் களின் பெயர்கள் அமைகின்றன. இதைப்போலவே ஹலீமா பின்த் ஜாபர் (ஜாபரின் மகள் ஹலீமா) சுப்யா பின்த் அப்துல்லாஹ் (அப்துல்லாஹ்வின் மகள் சுப்யா) என்று பெண் பெயர்களும் அமைகின் றன; பிற்காலத்தில் அபூசலீம் (சலீமின் தந்தை)

உம்மே ஹபீபா (ஹபீபாவின் தாய்) என்ற துணைப் பெயர்களும் ஏற்படுவது உண்டு. இந்தத் துணைப் பெயர்கள் தொழில், சிறப்பு, திறமை ஆகிய வழிகளி லும் தோன்றுவது உண்டு.

இந்தியாவிலும் தமது பெயருடன் தந்தையின் பெயரையோ குடும்பத்தின் பெயரையோ இணைத்துக் கொள்ளும் வழக்கம் இருந்து வருகிறது. ஒருவரின் பெயர் கைசர் என்றால் அவர் அத்துடன் தம் தந்தை யின் பெயரான ஜலாலையும் சேர்த்து 'கைசர் ஜலால்' என்று தம்மை வர்ணித்துக்கொள்வார். நான், 'ஹலீம் ஜாபர்' என்று ஒருவர் சொன்னால் பெரும் பாலும் அவரது தந்தையின் பெயர் ஜாபராக இருக் கும் என்று நாம் நினைத்துக்கொள்ளலாம். இதை சிலர் "ஹலீம் ஜாபரி" என்றும் சொல்லலாம். அப்போது ஜாபர் என்பது அவரது தந்தை அல்லது பாட்டனார் அல்லது முப்பாட்டனாரின் பெயராக இருக்கக்கூடும். ஜாபரின் பரம்பரையில் வந்தவர்கள் தங்களை 'ஜாபரி' என்று சொல்லிக் கொள்வார்கள். முஹம்மத் அலவி, முனீர் ரஷீதி, ஆமிர் உஸ்மானி, கலீம் சுப்ஹானி, சலீம் ஜமாலி என்பவை போன்ற பெயர்கள் இந்த முறையில் தோன்றியவையே!

பாகிஸ்தானிலும் வட நாட்டிலும் இரண்டு தனி பெயர்களைச் சேர்த்து (இரண்டாவது பெயர் தந்தையின் பெயராகவோ, குடும்பப் பெயராகவோ இருக்காது.) ஒரு பெயராகச் சூட்டிக்கொள்ளும்' வழக்கம் இருக்கிறது. ஹபீப் ஜாலிப், யூனுஸ், அஹ்மர், நவ்ரஸ் ஜமால், வகார் அஜீம், ஷம்ஸ் நவீத் என்ற முறையில் பெயர்கள் இருந்து வரு கின்றன. தந்தையின் பெயரை அல்லது குடும்பப்

பெயரை இரண்டாவது முறையில் உஸ்மானி, கரீமி, பாகரி என்று சேர்த்துக்கொள்கிறார்கள்.

பாரசீகத்திலும், அதற்கடுத்து இந்தியாவிலும் பெயருடன் தாம் பிறந்த நகரத்தின் பெயரையும் சேர்த்துக்கொள்ளும் வழக்கமும் இருந்திருக்கிறது. சஅதி ஷீராஜி என்றால் ஷீராஜ் எனும் ஊரைச் சேர்ந்த "சஅதி" என்று கொள்ளவேண்டும். அஷ்ரப் அலி தானவி என்றால் தானா எனும் ஊரைச் சார்ந்த அஷ்ரப் அலி அவர் என்று கொள்ளவேண்டும். ஷகீல் பதாயூனி (பதாயூன் நகரத்தவர்), ஜிகர் முராதாபாதி (முராதாபாத் நகரத்தவர்) ஷவ்கத் தெஹல்வி (தில்லி வாசி) ஹயாத் லக்னவி (லக்னோ நகரவாசி) மஹ்மூத் கஜனவி (கஜனா நகரத்தவர்) என்ற பெயர்களைப் பார்த்து பதாயூனி—தெஹ்லவி—பெங்களூரி—ஷீராஜி என்ற பெயர்களை குழந்தைகளுக்கு வைத்து விடுவது தவறாகும்!

"நிச்சயமாக நீங்கள் மறுமையில் உங்கள் பெயராலும் உங்களின் தந்தையின் பெயராலும் அழைக்கப்படுவீர்கள். எனவே, அழகான பெயர்களை வைத்துக் கொள்ளுங்கள்" என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மொழிந்துள்ளார்கள். மேலும் பெருமானார் (ஸல்) அவர்களே தவறான பெயர்களை மாற்றியும் வேறு பெயர்களை வழங்கி இருக்கிறார்கள்!

எனவே, உங்கள் பெயரையும், உங்களைச் சார்ந்தவர்களின் பெயர்களையும் ஒருமுறை சரிபார்த்துக் கொள்ளுங்கள். பெயர்களின் சரியான உச்சரிப்புகளையும் தெரிந்து கொள்ளுங்கள்.

. நல்ல முஸ்லீம் பெயர்களை தேர்ந்தெடுக்கும் முயற்சியில் உங்களுக்கு இந்நூல் பெரிதும் பயன் படும். இயன்றவரையில் இதில் தவறுன பெயர்கள் இடம் பெருவண்ணம் கவனம் செலுத்தப்பட்டு இருக்கிறது ! ஆண் பெண் அனைவரும் தங்கள் குழந்தைகளுக்கு மட்டும் அல்லாது தங்கள் வாணிப நிறுவனங்களுக்குக்கூட தாங்களே நல்ல பெயர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு இந்நூல் சிறப்பாக வழி காட்டுகிறது.

குழந்தையும் கிழமையும்

அந்தந்த நாளில் பிறக்கும் குழந்தையின் தன்மையைக் குறித்து ஆங்கிலப் பாடல் ஒன்று இருக்கிறது:

"திங்களன்று பிறக்கும் குழந்தை எழில் தோற்றம் பெற்றது; செவ்வாய்க் குழந்தை நயமும் நல்லெண்ணமும் கொண்டது; புதன் குழந்தைக்கோ மிகு துயரமும் ஆரிடரும் கிடைக்கிறது; வியாழனன்று பிறக்கும் குழந்தை நெடுந்தூரம் செல்லவேண்டும்; வெள்ளியன்று பிறக்கும் குழந்தை அழகானது; கொடுக்க கூடியது; சனியன்று பிறக்கும் குழந்தை தனது வாழ்வுக்காக கடினமாக உழைக்கவேண்டும்; ஆனல், புனித நாளான ஞாயிறு அன்று பிறக்கும் குழந்தை மகிழ்ச்சியான தோற்றமுடையதாகவும், சிறந்ததாகவும் இருக்கும்"—

இஸ்லாத்தில், இத்தகைய மூட நம்பிக்கைக்கு இடம் இல்லை !!

பொருள் நிறைந்த பெயர்கள்

பொருள் நிறைந்த பெயர்கள்

பெயர்களில் சிறந்தவை :

★ பெயர்கள் எல்லாவற்றிலும் ஆண்டவனுக்கு மிகவும் உவப்பானவை அப்துல்லாஹ், அப்துர்ரஹ்மான் ஆகியவை (போன்ற பெயர்) களேயாம்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மொழிந்தார்கள்.

★ தகவல் : இப்னே உமர் (ரலி).

★ ஆதாரம் : முஸ்லிம். ★

★ நபிமார்களுடைய பெயர்களைக் கொண்டு, பெயரிடுங்கள். பெயர்களில் ஆண்டவனுக்கு மிகவும் உவப்பானவை அப்துல்லாஹ், அப்துர்ரஹ்மான் ஆகும். பெயர்களில் நல்லவை ஹாரிஸ், ஹம்மாம் ஆகும். அவற்றில் கெட்டவை ஹர்புன், முர்ரதுன் (போன்ற பெயர்கள்) ஆகும் என்று பெருமானர் (ஸல்) அவர்கள் உரைத்தார்கள்.

★ தகவல் : அபுவஹ்ப் (ரலி).

★ ஆதாரம் : அபுதாவூத்.

★ மலிகுல் அம்லாக் (மன்னர் மன்னன்) என்ற பெயரை இடுவது அல்லாஹ்வுக்கு மிகமிக இணை யான பெயரை இடுவதாகும். ஆண்டவனைத் தவிர அரசர்க்கு அரசன் வேறு ஒருவனுமில்லை என்று நாயகம் (ஸல்) அவர்கள் பகர்ந்தார்கள்.

★ தகவல்: அபுஹுரைரா (ரலி)

★ ஆதாரம்: திர்மிதீ.

பெயரிடும் முறை

★ குழந்தை பிறந்த ஏழாம் நாளன்று அதற் குப் பெயரிடுங்கள். அதன் தலைமுடியை அகற்றுங்கள், "அகீகா" கொடுங்கள் என்று நபிமணி (ஸல்) அவர் கள் பணித்தார்கள்.

தகவல்: இப்னே உமர் (ரலி).

★ ஆதாரம்: அபூதாவூத்

★ எனக்கு ஒரு குழந்தை பிறந்தது. அதைத் தூக்கிக் கொண்டு அண்ணல் நபி (ஸல்)அவர்களிடம் சென்றேன். அவர்கள் அக் குழந்தைக்கு இப்ருஹீம் எனப் பெயரிட்டுப் பேரீச்சம் பழத்தைமென்று அதன் வாயில் ஊட்டினார்கள். குழந்தையை வாழ்த்தி அதற் காக இறைவனிடம் இறைஞ்சினார்கள். பிறகு, என் னிடம் தந்துவிட்டார்கள். இக்குழந்தைதான் எனக்கு முதல் திருமகனாகும்.

தகவல்: அபூமூஸா (ரலி). ★ஆதாரம்: புகாரி

★ அப்துல்லாஹ் இப்னே அபூதல்ஹா பிறந்த போது நான் அவரைத் தூக்கிக்கொண்டு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றேன். அப்போது அவர்கள் 'ஜுப்பா' அணிந்துகொண்டு தங்களின் ஒட்டகத்திற்கு மருந்து தடவிக்கொண்டிருந்தார்கள். என்னைப் பார்த்து உம்மிடம் பேரீச்சம் பழம் இருக்கிறதா என்று கேட்டார்கள். 'ஆம்' எனக் கூறி, சில பேரீச்சம் பழங்களை எடுத்து அவர்களிடம் கொடுத்தேன். அதனைமென்று, அவர்கள் குழந்தையின் வாயைத் திறந்து ஊட்டினார்கள். குழந்தை வாயைத் திறந்து ருசித்தது. (அதைக்கண்டு எம்பெருமானார் (ஸல்) அவர்கள்) ''அன்ஸாரிகள் பேரீச்சம் பழத்தின் மீது எவ்வளவு பிரியம் வைத்திருக்கிறார்கள்'' என்று (மகிழ்ச்சி மொழி) கூறி, அதற்கு அப்துல்லாஹ் என்று பெயரிட்டார்கள்.

தகவல்: அனஸ் (ரலி) ★ ஆதாரம்: புகாரீ

★ நான் கர்ப்பவதியாக இருந்தேன். என் வயிற்றில் அப்துல்லாஹ் இப்னே ஜுபேர் இருந்தார். நான் மக்காவை விட்டுப் புறப்படும் பொழுது சூல் முற்றி (பிள்ளை பிறக்கும் நிலையில்) இருந்தது. நான் மதீனா செல்லும் வழியில் கூபா என்ற இடத்தில் தங்கினேன். அங்கே அப்துல்லாஹ் பின் ஜுபேர் பிறந்தார். அவரைத் தூக்கிக் கொண்டு அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, அவர்களின் மடியில் கிடத்தினேன். அவர்கள் பேரீச்சம் பழம் வரவழைத்து, அதனை மென்று குழந்தையின் வாயில் ஊட்டினார்கள். குழந்தையின் வயிற்றுக்குள் முதன் முதலாகச் சென்ற பொருள் எம்பெருமானார் ஸல்) அவர்களின் உமிழ்நீரேயாம். பிறகு அவர்கள்

குழந்தையை வாழ்த்தி, அதற்காக இறைவனிடம் இறைஞ்சிவிட்டு அப்துல்லாஹ் என்று பெயரிட்டார்கள். இந்தக் குழந்தை தான் மதீனாவில் முஸ்லிம்களுக்கு முதன்முதலில் பிறந்த குழந்தையாகும். எனவே, எல்லாரும் பெருமகிழ்ச்சி அடைந்தனர். ஏனெனில், முஸ்லிம்களுக்குக் குழந்தைகள் பிறக்கா வண்ணம் யூதர்கள் சூன்யம் செய்திருந்தார்கள என்று அவர்கள் கேள்வியுற்றிருந்தார்கள்.

தகவல்: அஸ்மா (ரலி) ★ ஆதாரம்: முஸ்லிம்

பெயர் மாற்றம்

★ அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கெட்ட பெயர்களை மாற்றி (வேறு பெயரிட்டு) விடுவார்கள்.

தகவல்: ஆயிஷா (ரலி) ★ ஆதாரம்: திர்மிதீ

★ ஜைனப்புடைய பெயர் பர்ரா (நன்மை) என்று இருந்தது. "நீங்களே உங்கள் மனதை (நல்லவர் என்று தம்மையே பாராட்டிக் கொண்டு) தூய்மைப்படுத்திக் கொள்கிறீர்களா?" என்று ஆட்சேபிக்கப்பட்டபோது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் 'ஜைனப்' என்று (அவருக்குப்) பெயரிட்டார்கள்.

தகவல்: அபூ ஹுரைரா (ரலி)
★ ஆதாரம்: புகாரீ

★ ஜுவேரியாவுடைய பெயரும் (முதலில் பர்ரா என்றே இருந்தது) அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அந்தப் பெயரை ஜுவேரிய்யா என்று மாற்றி அமைத்தார்கள். தம்மிடமிருந்து பர்ரா (நன்மை) போய்விட்டது என்று கூறப்படுவதை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் விரும்பாததே இதற்குக் காரண மாகும்.

தகவல்: இப்னே அப்பாஸ் (ரலி)

★ ஆதாரம்: முஸ்லிம்

★ ஒருவருடைய பெயர் அஸ்ரம் (வெட்டுபவன்) என்று இருந்தது. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அவரை நோக்கி "உமது பெயர் என்ன?" என்று வினவினர். "அஸ்ரம்" என்று அவர் பதிலளித்தார். இல்லை; நீர் 'சுர்ஆ' (விவசாயி) என்றார்கள் எம்பெரு மானார் (ஸல்) அவர்கள் ....

தகவல்: புஷைர் இப்னு மைமுன் (ரலி)

★ ஆதாரம்: அபுதாவூத்

★ (ஹானி என்னும் பெயருடைய) என்னை என் கூட்டத்தினர் அபுல்ஹகம் (நீதத்தின் தந்தை)என்ற சிறப்புப் பெயரால் அழைத்து வந்தனர். இதனைக் கேள்விப்பட்ட அண்ணல் நபி (ஸல்) அவர்கள் என்னை அழைத்து, "நிச்சயமாக அல்லாஹ் தான் தீர்ப்பு வழங்குபவன். கட்டளையிடுபவனும் அவனே. நீர் எந்த காரணத்தால் அபுல்ஹகம் என்று சிறப்புப் பெயரை வைத்துக்கொண்டீர்?" என்று கேட்டார்கள். "என்னுடைய கூட்டத்தினரின் இடையில் ஏதாவது தகராறு ஏற்பட்டால் என்னிடம் வருவார்கள். நான்

தீர்ப்பு அளிப்பேன். இரு சாராரும் என்னுடைய தீர்ப்பை ஏற்றுக்கொள்வார்கள்'' என்று மறுமொழி நவின்றேன். "இது மிக அழகிய செயல்தான்'' எனப் பகர்ந்த அவர்கள் "உமக்கு மக்கள் உண்டா?'' என்று கேட்டார்கள். அதற்கு நான் "ஷுரைஹ், முஸ்லிம், அப்துல்லாஹ் என்ற மூவர் இருக்கிறார் கள்'' என்றேன். "இவர்களில் மூத்தவர் யார்?'' என்று அவர்கள் வினவினார்கள். நான் 'ஷுரைஹ்' என்றேன். "அப்படியானால் நீர் அபுஷுரைஹ்'' ஆவீர் என்றார்கள் பெருமானார் (ஸல்) அவர்கள்—

தகவல்: ஷுரைஹ் பின் ஹானி ★

ஆதாரம்: நஸாயீ

★ முஸையப் (ரலி) அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். அப்போது அவர் கள் அவரை நோக்கி, "உமது பெயர் என்ன?'' என்று கேட்டார்கள். அதற்கு அவர் 'ஹஸ்லூன்' (கடினமான தரை) என்று கூறினார். "அல்ல, நீர் ஸஹ்லூன் (இலேசான தரை) என்றார்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்கள். அதற்கு அவரோ "என் தந்தை எனக்கு சூட்டிய பெயரை நான் மாற்றிக்கொள்ள விரும்பவில்லை'' என்றார். இதன் பின்னர் எங்களுக்கு எப்போது பார்த்தாலும் துன்பம் நிகழ்ந்துகொண்டிருந்தது என்று அவருடைய தனயன் ஸயீத் கூறினார்.

தகவல்: ஸயீத் ★ ஆதாரம்: புகாரீ

★ நான் உமர் (ரலி) அவர்களைச் சந்தித்தேன். அவர்கள் என்னை 'யார்?' என்று கேட்டார்கள்.

நான் அஜ்தஃ உடைய மகன் மஸ்ருக் என்றேன். அப்போது அவர்கள் அஜ்தஃ என்பது ஷைத்தானுடைய (மறு) பெயர் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மொழியத் தாம் செவியுற்றிருப்பதாகச் சொன்னார்கள்.

தகவல்: மஸ்ருக் ★ ஆதாரம்: அபூதாவூத்

★ அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஆஸியா (பாவியானவள்) என்ற பெயரை மாற்றி ஜமீலா (அழகி) என்று பெயரிட்டார்கள்.

தகவல்: இப்னே உமர் (ரலி) ★
ஆதாரம்: முஸ்லிம்

★ முன்சிர் இப்னே அபி உஸைத் பிறந்த போது நபிமணி (ஸல்) அவர்களிடம் கொண்டுவரப் பட்டார். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அந்தக் குழந்தையைத் தங்களின் மடிமீது வைத்துக் கொண்டு இதன் பெயர் என்ன? என்று வினவிடுத்தார்கள். இன்ன பெயர் என்று கூறப்படவே, "இல்லை; இதன் பெயர் முன்சிர் (அச்சமூட்டி எச்சரிப்பவர்) எனப் பகர்ந்தார்கள். அப்போது முதல் அதன் பெயர் முன்சிர் என்றாகி விட்டது.

தகவல்: ஸஹ்ல் இப்னு ஸஅத் (ரலி) ★
ஆதாரம்: புகாரீ

(ஆஸி (பாவி) அஜீஸ் (மிகைத்தவன்) உத்லா (கடுமை), ஷைத்தான் (கட்டளையை மீறுபவன்), ஷிஹாப் (தீக்கங்கு), ஹகம் (தீர்ப்பு வழங்குபவன்), குராப் (காகம்), ஹுபாப் (ஷைத்தானின் மறுபெயர்)

என்ற பெயர்களை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மாற்றி அமைத்தார்கள். ஷிஹாபுக்குப் பதிலாக ஹிஷாம் என்று மாற்றினார்கள். ஹர்புன் (போர்) என்பதற்குப் பதிலாக முஸ்லிம் (சமாதானம்) என்றும் முன் தஜிஃ (படுத்திருப்பவன்) என்பதற்குப் பதிலாக முன்பயிஸ் (எழுந்திருப்பவன்) என்றும் மாற்றினார்கள். எந்த நிலத்தின் பெயர் உஃப்ரத் (பசுமையற்றது) என்றிருந்ததோ அதை களிரத் (பசுமையானது) என்றும், ஷிஃபுள்ளலாலதி (கெட்ட பாதை) என்பதை ஷிஃபுல்ஹுதா (நேரிய வழி) என்றும் பனிச்சீனதி என்பதை பனீரிஷ்ததி என்றும் பனீ முக்வியா என்பதை பனீ ருஷ்தீன் என்றும் மாற்றி அமைத்தார்கள்.

ஆதாரம்: அபூதாவூத்)

பெயரும் குணமும்

★ உமர் (ரலி) அவர்கள் ஒருவரிடம் "உமது பெயர் யாது?' என்று கேட்க அவர் 'ஜம்ரதுான்' (தீப்பொறி) என்றார். நீர் யாருடைய மகன் என்று கேட்டார். அவர் 'ஷிஹாபின் (தீங்கங்கின்) மகன்' என்றார். நீர் எந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர் என்று கேட்டார். ஹர்கா (தீ எரிப்பவர்) கூட்டத்தைச் சேர்ந்தவன் என்றார் அவர். உங்கள் இருப்பிடம் எது என்று வினவினார்கள். ஹர்ரதுன்னார் (தீயின் சூடு) என்று பதில் கூறினார். எப்பகுதியில்

வாழுகிறீர் என்று கேட்டார். ஸாதுள்ளலா (கொழுந்து விட்டெரியும் அக்கினி) என்ருர். உடனே உமர் (ரலி) அவர்கள் அவரை நோக்கி, ''உம்முடைய குடும்பத்தினரை, உற்ருர் உறவின ரைச் சென்று பாரும். அவர்களெல்லாம் எரிந்து சாம்பலாகிவிட்டனர் என்று மொழிந்தார்கள். உண்மையில் அவ்விதமே ஆகி இருந்தது.

தகவல்: யஹ்யா பின் ஸயீத் (ரலி) ★

ஆதாரம்: முஅத்தா

★ அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பால் (கொடுக்கும்) ஒருஒட்டகத்தைக் காண்பித்து, ''இதில் யார் பால் கரப்பர்?'' என்று வினவினர். ஒருவர் எழுந்து நின்ருர். அப்போது அவர்கள், ''உம் பெயர் என்ன?'' என்று கேட்டார்கள். அதற்கு அவர் முர்ரது (கசப்பு) என்ருர். ''நீர் அமரும்'' என்று கூறிய அவர்கள் ''இதில் யார் பால் கரப்பர்?'' என்று மீண்டும் வினவ வேறொருவர் எழுந்து நின்ருர். ''உமது பெயரென்ன?'' என்று கேட் டார்கள். அவர் ஹர்புன் (போர்) என்ருர். அவர் கள் ''நீரும் அமரும்'' என்ருர்கள். மீண்டும் ''இதில் யார் பால் கரப்பர்?'. என்று கேட்டார்கள். இன் ஞெருவர் எழுந்து நின்ருர். ''உம்முடைய பெயர் என்ன?'' என்று கேட்டார்கள். அதற்கு அவர், ''யயீஷு'' (வாழ்பவர்) என்று கூறினர். அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''நீர் பால் கரப்பீராக'' எனப் பணித்தார்கள்.

தகவல்: யஹ்யா பின் ஸயீத் (ரலி) ★

ஆதாரம்: மாலிக்

காரணப் பெயர்

★ அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பாதிமா (ரலி) அவர்களின் இல்லத்திற்குச் சென்ற சமயம் அங்கு அலி (ரலி) அவர்கள் இருக்கவில்லை. (எனவே) "உமது சிறிய தந்தையின் மகன் எங்கே?" என்று கேட்டார்கள், அதற்கு பாதிமா (ரலி) அவர்கள் எனக்கும் அவர்களுக்கும் இடையில் ஒரு சச்சரவு ஏற்பட்டு விட்டது. என்மீது கோபம்கொண்டு அவர்கள் வெளியே சென்றுவிட்டார்கள் என்று விடை நவின்றார். அப்போது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் (வெளியே வந்து) ஒருவரைச் சந்தித்து "அலி எங்கே இருக்கிறார்?" என்று கேட்டார்கள்; அதற்கு அவர் "அவர்கள் பள்ளிவாசலில் படுத்து உறங்குகிறார்கள்" என்று கூறினர். எம்பெருமானார் (ஸல்) அவர்கள் அலி (ரலி) அவர்களிடம் வந்த போது அலி (ரலி) அவர்கள் படுத்துறங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய போர்வை ஒரு புறத்தில் சற்று விலகி இருந்தது. அதனால் அவர்களின் திருமேனியில் சிறிது மண் ஒட்டிக் கொண்டிருந்தது. இதைக் கண்ணுற்ற அண்ணல் நபி (ஸல்) அவர்கள் "அபு துராப்! (மண்ணின் தந்தை) எழுந்திரும்" என்றார்கள். (இதன் பிறகு) அலி (ரலி) அவர்களுக்கு இப்பெயரைவிட வேறு எந்தப் பெயரும் உவப்பாக இருக்கவில்லை!

தகவல் : ஸஹ்லு (ரலி) ★

ஆதாரம் : புகாரீ

★ உமர் (ரலி) அவர்கள் அபூ ஈஸா (ஈஸாவின் தந்தை) என்ற அடைமொழிப் பெயர் சூடிக் கொண்ட (தற்காகக்) தமது மகனை அடித்தார்கள். ஆனால், அப்பொழுது முகைரா இப்னு ஷுஃபா (ரலி) அவர்களும் அபூ ஈஸா என்ற சிறப்புப் பெயரைச் சூடி இருந்தார். (ஒருமுறை) உமர் (ரலி) அவர்கள், முகைரா (ரலி) அவர்களைப் பார்த்து, “நீங்கள் அபூ அப்துல்லாஹ் என்ற காரணப் பெயர் சூடிக்கொண்டால் அது உங்களுக்குப் பொருத்தமானது அல்லவா” என்று வினவினார், அதற்கு அவர்கள், “நிச்சயமாக அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தாம் எனக்கு அபூ ஈஸா என்ற சிறப்புப் பெயர் சூட்டினார்கள் என்று பதில் மொழிந்தார். அதற்கு உமர் (ரலி) அவர்கள் “உண்மையாகவே அண்ணல் நபி (ஸல்) அவர்களின் முந்திய பிந்திய பாவங்கள் யாவும் மன்னிக்கப்பட்டு விட்டன. ஆனால், நாமோ அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்குப்பின் மற்ற சகோதரர்களின் நிலையில் தான் உள்ளோம். நம்முடைய எவ்வித வழக்க முறைமைகள் ஏற்படுமோ யாரறிவர்?” (அதாவது காலம் கெட்டுக் கொண்டிருக்கிறது. மக்கள் இந்த அன்மொழிப் பெயரால் ஈஸா (அலை) அவர்களுக்குத் தந்தை இருந்தார்கள் என்று நினைத்து விடாமல் இருக்க வேண்டுமே) என்று மொழிந்தார்கள். (அன்று முதல்) முகைரா (ரலி) அவர்கள் இறக்கும் வரை அபூ-அப்துல்லாஹ் என்ற சிறப்புப் பெயரைக் கைவிடவே இல்லை!.

தகவல் : அஸ்லாம் (உமர்ரலி அவர்களின் அடிமை

★ ஆதாரம் : அபூதாவூத்.

★ "நாயகமே! என் தோழியர் அனைவருக்கும் சிறப்புப் பெயர் உண்டு" என்று நான் பெருமானார் (சல்) அவர்களிடம் சொன்னேன். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உம்முடைய (தமக்கை) மகன் அப்துல்லாஹ் இப்னு ஜுபேர் அவர்களுடைய பெயரால் சிறப்புப் பெயர் வைத்துக் கொள்ளும்" என்று கூறினார்கள். அதற்குப் பிறகு உம்மு அப்துல்லாஹ் என்பது என் சிறப்புப் பெயராகி விட்டது.

தகவல் : ஆயிஷா (ரலி) ★ ஆதாரம் : புகாரீ

★ எங்களில் ஒருவருக்கு ஆண்குழந்தை பிறந்தது. அதற்கு அவர் காஸிம் எனப்பெயர் சூட்டினார். நாங்கள் அவரிடம் "உம்மைக் காஸிமின் தந்தை என்ற சிறப்புப் பெயரிட்டு அழைக்க மாட்டோம். உம்மைக் கண்குளிர வைக்க மாட்டோம்" என்று சொன்னோம். உடனே அவர் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் சென்று இதைக் கூறவே, அவர்கள் உமது மகனின் பெயர் அப்துல் ரஹ்மான் என்று திருவாய் மலர்ந்தார்கள்.

தகவல் : ஜாபிர் (ரலி) ★ ஆதாரம் : அபுதாவூத்

(என்னுடைய பெயரை வைத்துக் கொள்ளுங்கள் ஆனல், அபுல்காஸிம் எனும் சிறப்புப் பெயரை வைக்காதீர்கள். ஏனெனில் நான் அல்லாஹ்விட மிருந்துபங்கிடுபவராக ஆக்கப்பட்டுள்ளேன். எனவே, உங்களுக்கிடையில் பொருள்களைப் பங்கிடுகிறேன் என்று எம்பெருமானார் (ஸல்) அவர்கள் மொழிந்த தாக ஓர் அறிவிப்பில் காணப்படுகிறது. மேலும், "என் பெயரை வைத்துக் கொள்பவர்கள் என்

சிறப்புப் பெயரைச் சூட்டிக்கொள்ள வேண்டாம். என் சிறப்புப் பெயரைச் சூட்டிக் கொள்பவர்கள் என் பெயரை வைத்துக்கொள்ள வேண்டாம்'' என்றும் அவர்கள் மொழிந்ததாக அபூதாவூதின் வேருேர் அறிவிப்பில் காணப்படுகிறது)

உங்கள் சிந்தனைக்கு!

★ யஃலா, பரகத், அப்லாஹ், யஸார், நாபே போன்ற பெயர்களை இடுவதை விட்டும் (முஸ்லிம்களைத்) தடுத்துவிட எம்பெருமானர் (ஸல்) அவர்கள் எண்ணி இருந்தார்கள். பின்னர் அவர்கள் வெறுமனே மௌனமாய் இருந்துவிட்டதை நான் கண்டேன். அவர்கள் இறந்தும் விட்டார்கள். அவர்கள் அவற்றைத் தடை செய்யவில்லை.

தகவல் : ஜாபிர் (ரலி) ★ ஆதாரம் : முஸ்லிம்.

(பரகத் இருக்கிருரா என்று ஒருவர் கேட்டால், அவர் இல்லாவிட்டால் 'இல்லை' என்று வீட்டில் இருப்பவர்கள் விடை பகர்வார்கள். அதனுல் தான் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு எண்ணினுர்கள் போலும் என்று அபூதாவூதில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.)

சந்தேகமும் தெளிவும்

குழந்தைகளுக்குப் பெயரிடுவதற்கான இஸ்லாமியச் சட்ட திட்டங்கள் உண்டா ?

★ ஆண்டவன்: "அப்துல்லாஹ், அப்துர்ரஹ்மான்" என்ற பெயர்களை விரும்புகிருன். ஆனால், இந்தக் காலத்தில் இப் பெயர்களை விடுத்து வேறு நல்ல பெயர்களாக வையுங்கள்; ஏனெனில் மக்கள் பொதுவாக 'அப்த்' என்பதை விட்டு "ரஹ்மான் கரீம்" என்று அழைக்கிருர்கள். இது ஒழுங்கு முறைக்கு முரணானது. அழைப்பவர்கள் முழுப் பெயருடன் கூப்பிட வேண்டும். அப்துல் கரீம், அப்துர் ரஹ்மான் என்று!

அப்துல் ஹசன், அப்துல் ஹுசேன் போன்ற பெயர்கள் சரியானவைதானு ?

★ 'ஹசன், ஹுசேன்' ஆகியவை அல்லாஹ்வின் (குணப்) பெயர்களில் இல்லை. எனவே 'அப்துல் ஹுசேன்' என்று பெயர் வைக்காதீர்கள். முஹம்மத் ஹசன், முஹம்மத் ஹுசேன் என்று வையுங்கள்.

திருக்குர் ஆனைத் திறக்கும்போது எதிர்ப் பக்கத்தின் ஏதாவது வசனத்திலிருந்து பெயரைத்

தோங்தெடுக்க வேண்டும் என்று சொல்கிறார்களே இது சரியானதா ?

★ இது மார்க்கச் சட்டம் அல்ல.

குறிப்பிட்ட தினத்தில் பிறக்கும் குழந்தைக்கு, குறிப்பிட்ட எழுத்தில் ஆரம்பமாகும் பெயரை வைக்கவேண்டு என்று நிலவும் கருத்து சரியானதா ?

★ இதுவும் மார்க்கச் சட்டம் அல்ல.

குழந்தைகளுக்கு எவ்விதப் பெயர்களைச் சூட்ட வேண்டும் ?

★ ஆண்களுக்கு நபிமணி (ஸல்) அவர்களின் மேன்மைமிக்க தோழர்களின் பெயர்களும், பெண்களுக்கு நபிமணி (ஸல்) அவர்களின் இல்லக்கிழத்தியார்களான அன்னையார்களின் பெயர்களும் சூட்டுங்கள். வேறு பெயர்கள் இடுவதும் சரியானதே. ஆனால் அவை மார்க்கத்திக்குப் புறம்பாக இருக்கக் கூடாது.

விடை மொழிபவர் : அப்துல் வஹ்ஹாப்

சரி பார்த்தவர் : உஸ்மான் கபர்லஹ்ஹு ரஹ்மான்

தலைமை முப்தி,
மதரஸதுல் பாகியாதுஸ் ஸாலிஹயாத்
வேலூர்
5, ரபியுஸ்ஸானி' 88 (ஹி).

முஸ்லிம் பெயர்கள்

★ குழந்தைகளுக்குப் பெயரிடுவதற்கான தனிச் சட்ட திட்டங்கள் இல்லை என்றாலும், தங்கள் குழந்தைகளுக்குப் பெற்றோர்கள் சிறந்த பெயர்களைச் சூட்டிவிட வேண்டும். மறுமையில் நீங்கள் உங்கள் பெயராலும் உங்கள் தந்தையின் பெயராலும் அழைக்கப்படுவீர்கள். எனவே, அழகான பெயர்களுடன் திகழுங்கள் என்று நபிமணி (ஸல்) அவர்களின் அருண்மொழி இருக்கிறது.

★ ஆண்டவனின் தனிப் பெயர்கள், குணப் பெயர்களுடன் 'அப்த்' ஐச் சேர்த்துக் கொண்டால் அவை சரியான முஸ்லிம் பெயர்களாகி விடும். தீர்க்க தரிசிகள், நபிமணி (ஸல்) அவர்களின் மேன்மை மிக்க தோழர்களின் பெயர்களும் சிறந்தவை; நற்பேறு பெற்றவை.

★ நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தவறான பெயர்களைச் செவியுற்ற சமயங்களில் அவைகளை மாற்றி நல்ல பெயர்களைச் சூட்டினார்கள்.

★ குறிப்பிட்ட நாளில் பிறக்கும் குழந்தையின் பெயர் குறிப்பிட்ட எழுத்தில் ஆரம்பமாக வேண்டும் என்று நினைப்பது தவறு. அதைப்போலவே திருக்குர்ஆனைத் திறந்து, எதிர்ப்படும்பக்கத்திலிருந்து பெயரைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்ற கருத்தும்

தவறானது. மார்க்கச் சட்டங்களில் எங்கும் இவற்றிற்கு ஆதாரம் இல்லை !

விளக்கம் தருபவர் : முஹம்மத் அப்துல்லாஹ்

சரி பார்த்தவர்கள் : 1. நிஜாமுத்தீன்
2. மஹ்மூத் அவர்கள்.

★ தாரும் உலூம், தேவ்பந்த் அளித்த தீர்ப்பு ★

எண்களுக்குரிய பெயர்கள்

பழங்காலத்தில் பெரிய குடும்பங்களில் எண்களுக்குரிய பெயர்கள் வழக்கத்தில் இருந்தன :

Una	பெண் பெயர்	(ஒன்று)
Secundus	ஆண் பெயர்	(இரண்டாவது)
Quentin	,,	(ஐந்தாவது)
Sextus	,,	(ஆறாவது)
Septimus	,,	(ஏழாவது)
Octavius	,,	(எட்டாவது)
Octavia	பெண் பெயர்	(,,)
Nona	,,	(ஒன்பதாவது)
Dacimus	ஆண் பெயர்	(பத்தாவது)
Decima	பெண் பெயர்	(,,)

முஸ்லிம்களிலும் இத்தகைய எண்களுக்கு உரிய பல பெயர்கள் வழங்கி வருகின்றன. அவற்றில்,

சானி	ஆண் பெயர்	(இரண்டாவது)
சாலஸ்	,,	(மூன்றாவது)
சாமின்	,,	(எட்டாவது)
ராபிஆ	பெண் பெயர்	(நான்காவது)

ஆகியவை மிக அதிகமாகக் காணப்படுகின்றன.

இஸ்லாமிய முறை

குழந்தைக்குப் பெயர் சூட்டுவது எப்படி ?

குழந்தை பிறந்ததும், அதை நீராட்டி வெள்ளை யான துணியில் வைக்கவேண்டும். (மஞ்சள் நிறத் துணி உபயோகிப்பதைத் தவிர்த்துவிடுதல் நலம்). அதன் செவியில் பாங்கு ஒலியை எழுப்பவேண்டும். அது கேட்கும் முதல் சப்தம் பாங்கு சப்தமாக இருப் பது நலம் (மாதர்குல மாணிக்கம் பாதிமா (ரலி) அவர்கள் ஆண்மகவை (ஹுசேன் ரலி அவர்களை) ஈன்றபோது நபிமணி (ஸல்) அவர்கள் பாங்கு ஓதி "குல் ஹுவல்லாஹு அஹத்" வாசகத்தை (சூரா) ஓதி செவியில் ஊதினர்கள்) பாங்கு சொல் லும் போது "ஹய்யா அலஸ் ஸலாத்" தும் "ஹய்யா அலல் பலாஹ்"வும் வரும் சமயம் முகத்தை வலதுபுறமும் இடதுபுறமும் திருப்ப வேண்டியதில்லை.

பிறகு "இன்னி ஊஈதுஹா பிக்கவதுற்றிய யாத்தஹாமினஷ் ஷய்தான் நிர்ரஜீம்" (இறைவா ! இந்தக் குழந்தையையும் இதன் சந்ததியையும் வெறுத்து ஒதுக்கப்பட்ட சாத்தானின் தீங்கினை விட்டும், உனது துணைகொண்டு பாது காப்புத் தேடுகிறேன்) என்ற வசனத்தைப் படித்து வலது காதில் ஊதவேண்டும். பிறகு 'இகாமத்து' வாசித்து இடது காதில் ஊதவேண்டும். (எந்தக் குழந்தையின் வலது காதில் பாங்கும், இடது காதில் இகாமத்தும் விழுகிறதோ அதை சாத்தான் தீண்ட

மாட்டான் என்று எம்பெருமானார் (ஸல்) அவர்கள் மொழிந்துள்ளார்கள்).

இந்தச் சடங்கு முறையை நிறைவேற்றுபவர் நெறிமுறை தவருத பெரியாராக இருக்கவேண்டும். அவரே தனது கையால் இனிப்பை (உதாரணமாக தேன் அல்லது பேரீச்சம்பழம்) எடுத்து அதன் நாவில் வைக்க வேண்டும். அப்பொழுதே முடிந்தால் சூட்ட வேண்டிய பெயரை மூன்று முறை உரத்த குரலில் உச்சரிக்கவேண்டும். ஆண் குழந்தையாக இருந்தால் பெயருடன் " சம்மாக்கல்லாஹு " என்ற வார்த்தையையும், பெண் குழந்தையாக இருந்தால் " சம்மாக்கில்லாஹு " என்ற வார்த்தையையும் பெயருக்கும் முன்பாக இணைத்துச் சொல்வது சிறப்பானது. உதாரணமாக ஜலாலுத்தீன் என்ற பெயரைச் சூட்டினுல் " சம்மாக்கல்லாஹுபிஜலாலுத்தீன்" என்றும், ரஹ்மத்துன்னிஸா என்று பெயரிடுவதாக இருந்தால் " சம்மாக்கில்லாஹு பிரஹ்மத்துன்னிஸா " என்றும் சொல்லி மூன்று முறை அழைக்க வேண்டும். பிறகு அந்தக் குழந்தையின் நலத்திற்காகவும் பெற்ருேரின் நன்மைக்காகவும் இறைவனிடம் பிரார்த்தனை செய்வது வழக்கம்.

ஆண் குழந்தை பிறந்தால் மகிழ்ச்சி கொண்டாடுவதும், பெண் குழந்தை பிறந்தால் வெறுப்பு கொள்வதும் தவருகும். நபிமணி (ஸல்) அவர்கள் பெண் குழந்தைகளையே அதிகமாக நேசித்தார்கள். மேலும் பல பெரியார்கள் தங்களுக்குப் பெண் குழந்தையே பிறக்கவேண்டும் என்று விரும்பினார்கள் !

பிறகு ஏழாம் நாளன்று குழந்தையின் தலை முடியை (அது பெண் குழந்தையாக இருந்தாலும் தான்) எடுக்கவேண்டும். அன்று குழந்தைக்குப் பெயர் இட்டு அகீகாவை நிறைவேற்றி தலைமுடியை எடுத்து விடுவதுதான் நியமன ஒழுங்காகும்.

இறக்கிய தலைமுடியை நிறுத்து, அதன் எடைக்குச் சமமான பொன் அல்லது வெள்ளியை தர்மம் செய்ய வேண்டும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆணைக்கேற்ப, பாதிமா (ரலி) அவர்கள் ஹுஸைன் (ரலி) அவர்களின் முடிக்குச் சம எடையான வெள்ளிக் காசை (திர்ஹம்) ஏழை மக்களுக்கு வழங்கினார்கள். "நீ செய்யும் தர்மம், இடர்களை அகற்றுவதோடு உனக்கு நல்வாழ்வினை அமைத்துத் தருவதற்கான வல்லமை வாய்ந்தது" என்று பெருமானார் (ஸல்) அவர்கள் அருண்மொழி வழங்கினார்கள்.

அகீகா என்றால் என்ன ?

குழந்தை பிறந்த ஏழாம் நாளில் ஆண் குழந்தைக்கு இரு ஆடுகளும், பெண் பிள்ளைக்கு ஓர் ஆடும் அறுத்து தானம் செய்வதுதான் அகீகா எனப்படுகிறது. இதற்காக எந்தக் குறையும் இல்லாத சிறந்த ஆடுகளே தேர்ந்தெடுக்கப்படுகின்றன. அகீகாவுக்காக ஆடு (அல்லது பசு அல்லது ஒட்டகம்) அறுக்கும்போது இந்தப் பிரார்த்தனையைச் செய்ய வேண்டும்.

اَللّٰهُمَّ هٰذَا عَقِيْقَةُ ابْنِىْ فُلَانٍ دَمُهَا بِدَمِهٖ
وَلَحْمُهَا بِلَحْمِهٖ وَعَظْمُهَا بِعَظْمِهٖ وَجِلْدُهَا
بِجِلْدِهٖ وَشَعْرُهَا بِشَعْرِهٖ اَللّٰهُمَّ اجْعَلْهَا فِدَآءً
لِابْنِىْ مِنَ النَّارِ بِسْمِ اللّٰهِ اَللّٰهُ اَكْبَرُ

"இறைவா! இது எனது மகனின் (இங்கு குழந்தையின் பெயரைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.) அகீகாவாகும். இதன் இரத்தம் அவனது இரத்தத்திற்குப் பதிலாக, இதன் இறைச்சி அவனதுஇறைச்சிக்குப்பதிலாக, இதன் எலும்புகள் அவனது எலும்புக்குப்பதிலாக, இதன் தோல்அவனது தோலுக்குப் பதிலாக, இதன் முடி அவனுடைய முடிக்குப் பதிலாக, இறைவனே! இதை எனது மகனின் நரகத்திற்கு விடுதலை ஈடாக ஏற்றுக்கொள்! ஆண்டவன் பெயரால் ஆரம்பிக்கிறேன். ஆண்டவன் பெரியவன்."

(அரபி வாசகம் பெண்குழந்தைக்கும் ஆண் குழந்தைக்கும் ஒரேவிதமானதுதான்—முதல் வரியில் 'புலான்'வுக்குப் பதிலாக குழந்தையின் பெயரைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.)

இந்தப் பிரார்த்தனை ஞாபகம் இல்லாவிட்டாலும், "பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர்" என்று மட்டும் சொன்னாலும் அகீகா நிறைவேறிவிடும்—.

குழந்தையின் தலைமுடி எடுக்கப்பட்டதும், குங்குமப்பூ அல்லது சந்தனம் அரைத்துத் தடவவேண்டும்.

தாய் தாமே குழந்தைக்குப் பாலூட்டுவது சிறப்பானது. ஏதேனுமொரு முக்கியமான காரணத்தால் இது முடியாவிட்டால் வேறொரு பெண்ணிடம் பாலூட்டச் செய்யலாம்—.

குழந்தை பிறந்த ஏழாவது நாளில் 'அகீகா'வை நிறைவேற்றுவதற்குரிய பொருள் வசதி பெற்றோர் கையில் இல்லாவிட்டால் வசதி வந்த பிறகு இதைச் செய்யலாம். பையன் தான் பால்யனான பிறகும்கூடத் தனக்காகத் தானே 'அகீகா'வை நிறைவேற்றலாம். அப்போது பெற்றோர்களின் பொறுப்பும் நீங்கிவிடுகிறது. நபிமணி முஹம்மத்(ஸல்) அவர்கள் தாங்கள் தீர்க்கதரிசியாகி விட்ட பின்னரே, தங்களுக்காக 'அகீகா'வை நிறைவேற்றினார்கள் என்பதற்கு 'பத்ஹுல் ஜவா''தில் ஆதாரம் இருக்கிறது.

குழந்தை பிறந்த ஏழாம் நாளில் அதற்குப் பெயரிடுதல் அவசியமாகும். ஏழாவது நாளுக்கு முன்பாகவே குழந்தை மரித்துவிட்டாலும் அந்த ஏழாவது நாளில் பெயரிடவேண்டும். உயிர் ஊதப்படும் பக்குவத்தை எட்டிய பத்து மாதத்திற்கும் குறைவான சிசு பிறந்தாலும் அதற்கும் பெயரிட வேண்டும்!

குழந்தை பேசுவதற்கான தகுதியைப் பெறும் போது அதற்கு 'கலிமா'வும் ('லா இலாஹா இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலில்லாஹ்) பனி இஸ்ராயீல் ''சூரா''வின் கடைசி வாசகமும் சொல்லித்தரவேண்டும். கடைசி வாசகம் இது தான் :

قُلِ الْحَمْدُ لِلّٰهِ الَّذِىْ لَمْ يَتَّخِذْ وَلَدًا وَّلَمْ يَكُنْ لَّهٗ شَرِيْكٌ فِى الْمُلْكِ وَلَمْ يَكُنْ لَّهٗ وَلِىٌّ مِّنَ الذُّلِّ وَكَبِّرْهُ تَكْبِيْرًا

